MC.56/2024

16.02.2026

RW1 - அகமது பாஷா, த/பெ.அமீர் பாஷா, வயது–44

மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 03.45 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –04.20 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 16.02.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

இருவீட்டினர் சம்மதத்துடன் தான் உங்களுக்கும் முதல் மனுதாரருக்கும் 09.02.2003–ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். ஒன்றாம் மனுதாரருக்கு 40 சவரனும் உங்களுக்கு 5 சவரன் நகையும் திருமணத்தின்போது ஒன்றாம் மனுதாரரின் வீட்டில் போட்டார்கள் என்று சொன்னால் சரிதான். சாட்சி மீண்டும் திருமணத்தின்போது ஒன்றாம் மனுதாரருக்கு 10 சவரன் நகை போட்டார்கள் எனக்கு எதுவும் போடவில்லை என்று தன்னிச்சயைாக சொன்னார். திருமணத்தின்போது ஒன்றாம் மனுதாரருக்கு 10 சவரன் நகை மட்டுமே அணிவித்ததாக சொல்லுவது வழக்கிற்காக சொல்லும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. திருமணத்தின்போது ஒன்றாம் மனுதாரரின் தகப்பனார் ரூ.1,50,000/– திருமண செலவாக கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல நான் கொடுத்ததை அவர்கள் கொடுத்ததாக சொல்லுகிறார்கள். ரூ.1,50,000/– திருமண செலவினை ஒன்றாம் மனுதாரரின் தகப்பனார் தான் கொடுத்தார் என்றால் சரியல்ல. உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்று சொன்னால் மூன்று பிள்ளைகள் ஒரு பெண் மற்றும் இரண்டு ஆண் குழந்தைகள். பெண் குழந்தை 20.08.2004–ல் பிறந்தாள்.

11.02.2007 அன்று மகன் முகமது அல்கான் பிறந்தார். 01.03.2013 அன்று முகமது அம்தான் பிறந்தார். உங்கள் முதல் விசாணையில் மூத்த மகன் முகமது அல்கான் 11.02.2008–ல் தான் பிறந்ததாக சொல்லியுள்ளீர்கள் தற்போது அதற்கு மாறாக 11.02.2007–ல் பிறந்ததாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் ஒன்றாம் மனுதாரர் எவ்வித காரணமுமின்றி உங்களை கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ளீர்கள் எந்த வகையில் அவ்வாறு நடந்துகொண்டார் என்றால் ஆஷிப் என்பவருடன் தொடர்பில் இருந்த காரணத்தினால் அவ்வாறு சொன்னேன். ஆஷிப்பிற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனு ஏற்பு சான்று வழங்கினார்கள். காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு ஏற்பு சான்றை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் புகார் மனு ஏற்பு சான்று தாக்கல் செய்யவில்லை எனவும் வழக்கிற்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. மேற்கண்ட விவரம் தொடர்பாக ஆலங்காயம் ஜமாத்தில் சமாதானம் பேசினீர்களா என்றால் ஆலங்காயம் ஜமாத்திலும் ஆம்பூர் ஜமாத்திலும் இரண்டு முறை சமாதானம் பேசினோம். ஜமாத்தில் சமாதானம் பேசியதில் முச்சிலிகா பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. ஆலங்காயம் ஜமாத் மற்றும் ஆம்பூர் ஜமாத்திலும் மூத்தாவல்லியை விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் எடுத்துள்ளேன். இவ்வழக்கில் மேற்படி மூத்தாவல்லியை விசாரிப்பதற்கு தயாராக உள்ளீர்களா என்றால் தயாராக உள்ளேன். ஆஷிப்பை தரப்பினராக சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் இல்லை. தற்சமயம் நீங்கள் எங்கு வசித்து வருகிறீர்கள் என்றால் வாணியம்பாடியில் வாடகை கட்டிடத்தில் மாத வாடகை ரூ.4000/– முன்தொகை ரூ.20,000/– கொடுத்து தங்கிவருகிறேன். உங்கள் மூத்த மகளுக்கு முதல் மனுதாரர் தான் செலவு செய்து படிக்க வைத்து வருகிறார் எனவும் நீங்கள் மகளின் செலவுக்கு எதுவும் கொடுப்பதில்லை என்று சொன்னால் நான் அவருடைய படிப்புக்காக

ரூ.1,35,000/— கொடுத்துள்ளேன். நீங்கள் முன்னுக்குமுரணாக தவறான சங்கதியை சாட்சியாக அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மூத்த மகன் எங்கு படித்து வருகிறார் என்றால் பெங்களூருவில் கல்லூரி படித்து வருகிறார். என்ன படித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அவருடைய கல்வி கட்டணம் எவ்வளவு என்றால் ரூ.1,50,000/—. மூத்த மகன் கல்லூரி விடுதியில் படித்து வருகிறாரா என்றால் ஆமாம் விடுதி கட்டணம் எவ்வளவு என்றால் மாதம் ரூ.7000/—. வாணியம்பாடியில் கஸ்ராபாத் என்ற இடத்தில் முதல் மனுதாரரின் நகையை அடகு வைத்து ஒரு வீடு கிரயம் பெற்றீர்களா என்றால் ஆமாம். அதேபோல் ஆலங்காயத்தில் ரூ.75,00,000/— மதிப்பு பெறும் சொத்தை வீடாக கிரயம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி வீட்டில் தான் உங்கள் மனைவியும் குழந்தைகளும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆலங்காயத்தில் சாலை ஓரத்தில் மூன்று கடைகள் உங்கள் பெயரில் இயங்கி வருகிறது என்றால் இல்லை. ஒரு கடையில் இம்ரான் டீ கடை நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல மேற்படி சொத்து அடமானத்தில் உள்ளது நான் வாடகை வாங்குவதில்லை. இரண்டு மற்றும் மூன்றாம் கடையில் ஜெயசீலன் என்பவர் கடை வாடகைக்கு உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மொத்த சொத்தும் அடமானத்தில் தான் உள்ளது. எவ்வளவு தொகைக்கு அடமானம் வைத்துள்ளீர்கள் என்று சொன்னால் ரூ.10,00,000/— உங்களுக்கும் உங்கள் சகோதரர், சகோதரிகளுக்கும் இடையே பாகப்பிரிவினை நடந்தது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் இரண்டு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி இடத்தில் என்ன பயிர் செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் ஒன்றும் செய்யவில்லை. கிணறு உள்ளதா என்றால் 1/3 பாகம் கிணறு உள்ளது. மின் இணைப்பு கிணற்றிற்கு உள்ளதா என்றால் உள்ளது. உங்கள் நிலத்தில் 30 தென்னங்கன்று உள்ளது எனவும் அதன் மகசூலை நீங்கள் குத்தகைக்கு விட்டுள்ளீர்கள் என்று சொன்னால் இல்லை. அதேபோல் வாணியம்பாடி கஸ்ராபாத்தில் வாங்கிய வீட்டை முதல்

மனுதாரரை ஏமாற்றி உங்கள் பெயரில் கிரயப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு பாகப்பிரிவினையில் 2 ஏக்கர் நிலமும், 3 கடைகளும் சொந்தமாக ரூ.75,00,000/- மதிப்புள்ள வீடும் உள்ளது எனவும் அவ்வாறு இருக்கும் காரணத்தினால் முதல் மனுதாரருக்கு ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. முதல் மனுதாரர் தான் தன்னுடைய மகளை கஷ்டப்பட்டு படிக்க வைத்து வருகிறார் என்றால் சரியல்ல. நீங்கள் முதல் மனுதாரருக்கு மாதம் ரூ.10000/- ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யப்படும்போது மூன்றாம் மனுதாரருக்கு கொடுக்கவேண்டிய இடைக்கால ஜீவனாம்ச தொகை தான் ரூ.1,35,000/- கொடுத்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு அனைத்த வகையிலும் வருமானம் வருகிறது எனவும் முதல் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.02.16 17:36:29 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.